கூடுதல் சார்பு நீதிமன்றம், திருச்செங்கோடு, நாமக்கல் மாவட்டம்.
முன்னிலை : திரு.C.ஜெயப்பிரகாஷ், M.Com., M.L.,
கூடுதல் சார்பு நீதிபதி, திருச்செங்கோடு.
2025–ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 19–ஆம் நாள் புதன்கிழமை
திருவள்ளுவராண்டு 2055 குரோதி வருடம் மாசி மாதம் 07–ஆம்நாள்

**அசல் வழக்கு எண்.530/2023**

[CNR.No.TNNM06-001496-2023]

K.சந்திரன் .... வாதி

// எதிராக //

A.பாரதி .... பிரதிவாதி

இவ்வழக்கு கடந்த 22.11.2023 ஆம் தேதி தாக்கல் செய்யப்பட்டு, கடந்த 08.12.2023 ஆம் தேதி கோப்பிற்கு எடுக்கப்பட்டு, கடந்த 17.02.2025 ஆம் தேதி இறுதியாக விசாரணைக்கு வந்தபோது, வாதி தரப்பில் வழக்குரைஞர் திரு.M.விஸ்வநாதன் அவர்கள் முன்னிலையாகியும், பிரதிவாதி தரப்பில் வழக்குரைஞர் திரு.C.கோவிந்தராஜ் அவர்கள் முன்னிலையாகியும், எதிர்வழக்குரை தாக்கல் செய்யாத காரணத்தினால், கடந்த 19.11.2024 ஆம் தேதி ஒருதலைபட்சநிலைக்கு உட்படுத்தப்பட்டும், வாதி தரப்பு வழக்குரைஞரின் வாதுரை கேட்கப்பட்டும், வழக்குரை, சான்றாவணங்கள், வழக்கு கோப்பு ஆகியவைகள் கவனமாக பரிசீலிக்கப்பட்டு இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

**தீ ர் ப் பு ரை**

**1.** அசல் வழக்கானது கடனுறுதிச்சீட்டின்பேரில் தாவா தொகை, பின்வட்டி மற்றும் செலவுதொகை வேண்டி வாதியால் முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளது.

**2. வாதி தாக்கல் செய்த வழக்குரை சுருக்கம் :**

வாதி விவசாய தொழில் செய்பவர். பிரதிவாதியின் கணவர் ஆனந்தன் என்பவர் PWD, Water Board–ல் பணிபுரிந்து வருகிறார். வாதியும், பிரதிவாதியின் கணவரும் நண்பர்கள். வாதிக்கும், பிரதிவாதிக்கும் ஏற்கனவே கொடுக்கல் வாங்கல் இருந்து, அதன்படி கடந்த 03.11.2021 ஆம் தேதி பிரதிவாதி Repco Home Finance Ltd., ல் பெற்ற கடனை தீர்ப்பதற்காக ரூ.3,50,000/– கடனாக கேட்டதில், வாதி 15 நாட்களில் தொகை கொடுப்பதாக கூறினார். அதன்படி கடந்த 16.11.2021 ஆம் தேதி வாதி ரூ.3,50,000/– தொகையை வாதியின் வீட்டில் வைத்து, பிரதிவாதிக்கு கொடுத்தார். மேற்படி

தொகைக்கு மாதம் 1–க்கு ரூ.100/–க்கு 18% வட்டி சேர்த்து கூடிய அசலும், வட்டியும் வேண்டும்போது வாதிக்கு செலுத்துவதாக பிரதிவாதி கடனுறுதிச்சீட்டு எழுதிக் கொடுத்துள்ளார். கடந்த 18.10.2013 ஆம் தேதி திங்களூர் சார்பதிவாளர் அலுவலக ஆவண எண்.1982/2013 கிரைய ஆவணத்தின்படி பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட சார்பதிவாளர் அலுவலக நகலையும் கொடுத்திருந்தார். வங்கியிலுள்ள கடனை தீர்த்து அசல் கிரைய ஆவணத்தை கொடுப்பதாக பிரதிவாதி கூறினார். கடன்பெற்ற 16.11.2021 தேதி முதல் இன்றுவரை அசலோ வட்டியோ பிரதிவாதி செலுத்தவில்லை. பலமுறை பிரதிவாதியிடம் கடனுறுதிச்சீட்டிற்கான அசல்,வட்டித்தொகையை திரும்ப செலுத்தும்படி கேட்டும், வழக்குரைஞர் வழியாக கடந்த 29.08.2023 ஆம் தேதி அறிவிப்பு அனுப்பியும், மேற்படி அறிவிப்பை பெற்றுக்கொண்டு அசலோ, வட்டியோ திருப்பி செலுத்தவில்லை. எனவே, தாவா கடனுறுதிச்சீட்டிற்குரிய அசல்தொகை ரூ.3,50,000/–தொகையும், வழக்குதாக்கல் செய்யும் நாள்வரை கூடிய வட்டி ரூ.1,26,875/–தொகையும், ஆகமொத்தம் ரூ.4,76,875/– தொகையும், அசல் தொகைக்கு பின்வட்டியும், செலவு தொகையும் வாதிக்கு, பிரதிவாதியிடமிருந்து கிடைக்க வேண்டி இவ்வழக்கு முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளது.

3. வாதி தரப்பில், வாதி தன்னை வா.சா.1 ஆக விசாரித்து, வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.4 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்தும், கடனுறுதிச்சீட்டில் சாட்சியாக கையெழுத்து செய்த சாருக் என்பவர் வா.சா.2 ஆக விசாரித்தும் வழக்கு விசாரணை முடிக்கப்பட்டுள்ளது.

4. இவ்வழக்கில் தீர்மானிக்க வேண்டிய பிரச்சனை யாதெனில், வாதி வழக்குரையில் கோரியுள்ள தொகையும், பின்வட்டியும், செலவுதொகையும் வாதிக்கு, பிரதிவாதி செலுத்த வேண்டுமா? என்பதே தீர்மானிக்க வேண்டிய பிரச்சனையாகும்.

5. **பிரச்சனைக்கான தீர்வுகள்:**

**I.** வாதி தரப்பில் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.1 ஆவணத்தை இந்நீதிமன்றம் பரிசீலனை செய்து பார்க்கும்போது, கடந்த 16.11.2021 ஆம் தேதி வாதியிடம், பிரதிவாதி குடும்ப அவசர நிமித்தமாக தொகை ரூ.3,50,000/– ரொக்கம் கடனாக பெற்றுள்ளதும், வேண்டும்போது வாதிக்காவது, வாதியின் உத்தரவு பெற்றவருக்காவது செலுத்துவதாக

சரத்துக்கண்டு வா.சா.ஆ.1 கடனுறுதிச்சீட்டு எழுதிக் கொடுக்கப்பட்டுள்ளது. கடனுறுதிச்சீட்டிற்கான தொகை செலுத்தும்படி வாதி வழக்குரைஞர் வழியாக கடந்த 29.08.2023 ஆம் தேதி பிரதிவாதிக்கு அறிவிப்பு அனுப்பியிருப்பதும், மேற்படி அறிவிப்பை பிரதிவாதி பெற்றுக்கொண்டிருப்பதும் வா.சா.ஆ.2 மற்றும் வா.சா.ஆ.3 ஆவணங்களின் வழியாக அறியமுடிகிறது.

**II.** கடனுறுதிச்சீட்டில் எழுதியதும் சாட்சியாக கையொப்பம் செய்துள்ள வா.சா.2 என்பவர் இந்நீதிமன்ற சாட்சியத்தில், வாதியிடமிருந்து, பிரதிவாதி தொகை பெற்றுக் கொண்டதாகவும், கடனுறுதிச்சீட்டில் வா.சா.2 என்பவர் சாட்சி கையெழுத்து செய்துள்ளதாக கூறியுள்ள சாட்சியம் ஏற்புடைய சாட்சியமாக உள்ளது. வாதி, பிரதிவாதியிடம் தொகை செலுத்தும்படி கேட்டுள்ளது வா.சா.1 சாட்சியத்திலிருந்தும், வா.சா.ஆ.2 வழக்குரைஞர் அறிவிப்பின் வழியாகவும் அறியமுடிகிறது. வாதி தரப்பில் முன்னிலைப்படுத்தப்பட்டுள்ள வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.3 வரையிலான சான்றாவணத்தின் வழியாகவும், வா.சா.1 மற்றும் வா.சா.2 சாட்சியங்களின் வழியாகவும் வாதி, பிரதிவாதிக்கு கடந்த 16.11.2021 ஆம்தேதி தொகை ரூ.3,50,000/−கொடுத்துள்ளது நிரூபிக்கப்பட்டுள்ளது. வா.சா.1 சாட்சியத்தின் வழியாக இவ்வழக்கிற்கான வழக்குமூலம் நிரூபிக்கப்பட்டுள்ளது. எனவே, கடனுறுதிச்சீட்டில் கண்டுள்ளவாறு வாதிக்கு, பிரதிவாதி தொகை செலுத்தக்கடமைப்பட்டுள்ளார். கடனுறுதிச்சீட்டில் அசல் ரூ.3,50,000/− தொகைக்கு மாதம் 1−க்கு ரூ.100/−க்கு 1.50/− வீதம் வட்டி செலுத்துவதாகவும், வேண்டும்போது தொகை செலுத்துவதாகவும் பிரதிவாதி ஒப்புக்கொண்டிருப்பதால் வட்டியை பொறுத்து வாதி கணக்கிட்டுள்ளதை ஏற்றுக்கொள்வதே சரியானதாக இருக்கும் என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கின்றது. எனவே, வழக்குரை தொகை ரூ.4,76,875/− தொகையினையும், அசல்தொகை ரூ.3,50,000/−தொகைக்கு வழக்கு தாக்கல் செய்த நாள்முதல் தீர்ப்பாணை நாள்வரை உரிமையியல் விசாரணை நடைமுறைச்சட்டம் பிரிவு 34−ன் கீழாக ஆண்டொன்றுக்கு 9%வட்டியும், தீர்ப்பாணை நாள்முதல் தொகை வசூலாகும் நாள்வரை ஆண்டொன்றுக்கு 6% வட்டியும், வழக்கின் செலவுதொகையும் வாதிக்கு, பிரதிவாதி செலுத்த வேண்டும் என்று தீர்மானிப்பதே நீதியின் நலனுக்கு உகந்ததாக இருக்கும் என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கின்றது.

**6. முடிவில்,**

1. **வாதியின் வழக்கு செலவுதொகையுடன் அனுமதித்து தீர்ப்பளிக்கப்படுகிறது.**
2. **வழக்குரை தொகை ரூ.4,76,875/– தொகையினையும், அசல் தொகை ரூ.3,50,000/– தொகைக்கு வழக்கு தாக்கல் செய்த 22.11.2023 நாள்முதல் தீர்ப்பாணை நாளான 19.02.2025 ஆம் நாள்வரை ஆண்டொன்றுக்கு 9% வட்டியும், தீர்ப்பாணை நாள்முதல் தொகை வசூலாகும் நாள்வரை ஆண்டொன்றுக்கு 6% வட்டியும், வழக்கின் செலவு தொகையும் வாதிக்கு, பிரதிவாதி செலுத்த வேண்டும் என்று தீர்ப்பளிக்கப்படுகிறது.**

இந்த தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை திருத்தம் செய்யப்பட்டு, 2025 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 19–ஆம் நாள் அவையறிய திறந்த நீதிமன்றத்தில் தீர்ப்புரை பகரப்பட்டது.

C JAYAPPRAKASH
Digitally signed by C JAYAPPRAKASH
Date: 2025.02.19 17:24:34 +0530

கூடுதல் சார்பு நீதிபதி,
திருச்செங்கோடு.

**வாதி தரப்பு சாட்சிகள் :**

வா.சா.1 – சந்திரன் – வாதி
வா.சா.2 - சாருக் - 3ம்நபர்

**வாதி தரப்பு சான்றாவணங்கள்:**

| | | | |
|---|---|---|---|
| 1 | 16.11.2021 | வாதிக்கு, பிரதிவாதி எழுதிக்கொடுத்த கடனுறுதிச் சீட்டு – அசல் | வா.சா.ஆ.1 |
| 2 | 29.08.2023 | வாதி, பிரதிவாதிக்கு அனுப்பிய சட்ட அறிவிப்பு - அலுவலக நகல் | வா.சா.ஆ.2 |
| 3 | -- | மேற்படி அறிவிப்பை பிரதிவாதி பெற்றுக் கொண்டதற்கான அஞ்சலக ஒப்புதல் அட்டை - அசல் | வா.சா.ஆ.3 |
| 4 | -- | பிரதிவாதிக்கு சார்வாகாத திருப்பப்பட்ட அஞ்சலக கவர் - அசல் | வா.சா.ஆ.4 |

**பிரதிவாதி தரப்பு சாட்சி** : இல்லை
**பிரதிவாதி தரப்பு சான்றாவணங்கள்** : இல்லை

C JAYAPPRAKASH
Digitally signed by C JAYAPPRAKASH
Date: 2025.02.19 17:24:39 +0530

கூடுதல் சார்பு நீதிபதி,
திருச்செங்கோடு.